பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்:
வே. வ. இராமசாமி

CONNEMARA PUBLIC ...
27 JAN 1964

வெளியிடுவோர்:
சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்.
சென்னை-17.
சோபகிருது - தை
விலை : 25 காசு

பொருளடக்கம்

பக்கம்

1. மதுவிலக்கைத் தளர்த்தவும் கூடாது;
கைவிடவும் கூடாது! (தலையங்கம்) ... 3

2. பாரதீயப் பனைவெல்ல சில்ப பவன்—திரு. கே. சம்பந்தம் ... 7

3. பனைத் தொழில் பொருளாதாரம்—குமாரி என். பாலா ... 13

4. 100 மரங்கள் ஏறும் பயிற்சித் திட்டம் ... 17

5. ஆரம்பச் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணச் சலுகை ... 28

ஆண்டுச் சந்தா ரூ. 3

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 சோபகிருது௵ தை௴ பாளை 4

மதுவிலக்கை தளர்த்தவும் கூடாது; கைவிடவும் கூடாது

காந்தியடிகள் உயிருள்ளளவும் நாட்டில் மது அரக்கன் செய்து வந்த கொடுமைகளை அறவே ஒழிக்கப் பாடுபட்டு வந்தார். அதற்காகவும் தீவிரப் பிரசாரம் செய்தார். மக்கள் எல்லோரும் இந்த நல்ல இயக்கத்திற்கு மனமுவந்து ஆதரவளித்தனர். கள் அருந்தி ஏழைக் குடி மக்கள் மிக்க அவதிப்படுவதைப் போக்க நன் முயற்சிகள் எடுத்துக் கொண்டார் காந்தியடிகள். ஏழைப் பெண்களும் இதை மனமார ஏற்றுக்கொண்டு வரவேற்றனர். நாடெங்கிலும் நல்ல வரவேற்பு ஏற்பட்டது.

இந்த வாய்ப்பை முதன் முதலில் நமது சென்னை மாநில அரசு பயன்படுத்தி மது விலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. இம்மாதிரி மாநிலம் முழுதும் திட்டம் அமுலாகி நன்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. நமது மாநிலம் இந்தியாவுக்கு மட்டுமின்றி, இத்திட்டத்தை அமுல் நடத்த முடியாமல் கைவிட்ட அமெரிக்கா முதலிய நாடுகளுக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. இத்திட்டத்தின் காரணமாக ஏழைக் குடும்பங்கள் சண்டை சச்சரவின்றி சீரடைந்து பொருளாதாரத் துறையிலும் தீவிரமாக முன்னேற்றமடைந்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

மற்ருெரு புறத்தில் கள் இறக்கி வந்தோரின் குடும்பத்தினருக்குப் புனர்வாழ்வு அளிக்க பனைவெல்ல அபிவிருத்தித் திட்டமும் காந்திஜியால் தொடங்கப்பட்டு நாடு முழுவதிலும் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதனுல் பல இலட்சக் கணக்கான குடும்பங்கள் பனைவெல்லத் திட்டத்துடன், இதரப் பனைப்பொருள்களையும் தங்கள் ஓய்வு நேரங்களில் உற்பத்தி செய்து நல் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு உதவி அளிக்க கூட்டுறவு சங்கங்கள் முன்வந்துள்ளன. இக்குடும்பத்தினரே அந்த சங்கங்களை அமைத்து முன்னேற்றமடைந்து வருகின்றனர். பொருளாதாரத் துறையிலும் மேம்பாடு அடைந்து வருகிருர்கள். இந்த நிலையில் அவர்களைப் பழைய சீர்கெட்ட நிலைக்குக் கொண்டுவர வெகு சில சுய நலமிகள் முயலு கின்றனர். நன்கு முன்னேறி வரும் திட்டத்தைக் குலைக்கப் பார்க்கின்றனர்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்குப் பரிவு காட்டி, தாங்களும் மது அருந்தி, உல்லாசமாகக் காலத்தை விரயமாக்கலாம் என்று நினைக்கும் சில விஷமிகள் கையாளும் தந்திரச் செயல்களுக்கு நமது அரசு செவி சாய்க்கக் கூடாது.

கிட்டத்தட்ட 27 ஆண்டு காலமாக நன்கு நடைபெற்றுவரும் இத் திட்டத்தைக் குறை கூற மிகச் சில காங்கிரஸ்காரர்களும், துணிந்து செயலாற்றி வருகின்றனர். திரு. முன்ஷி போன்றவர்களும் இதை ஆதரிப்பதைக் காண விந்தையாக இருக்கிறது.

சிரமப்பட்டு ஒரு நல்ல கட்டிடம் கட்டுகிறேம். ஆனுல் அதை அழிப்பது மிகவும் சுலபம். ஆகையால் பல ஆண்டுகளாக நன்ருக நிறை வேற்றப்பட்டுவரும் நல்லதொரு மதுவிலக்குத் திட்டத்தை இனி சிறிதளவு கூடத் தளர்த்த அனுமதிக்கக் கூடாது. இத்திட்டத்தைக் கைவிடவும் கூடாது. காந்தியடிகளால் கொண்டுவரப்பட்ட நல்ல திட்டத்தை காங்கிரஸ் அரசுகளே கெடுத்து விட்டவர்களாக ஆகக்கூடாது. சில சுயநலமிகள், விஷமிகளின் விபரீதப் போக்குக்கு நேரு அரசு செவி சாய்க்கக்கூடாது என்பது எமது அவா.

இன்னும் இக்காலத்திய சிருர்கள் குடி என்பதை அறியார்கள். நிலைமை அப்படி இருக்க அவர்களுக்குக் குடிப் பழக்கத்தை உண்டு பண்ணி வருங்கால சந்ததியைக் கெடுக்க, கொழுத்த பணம் படைத்த சிற்றின்பப் பிரியர்களைத் தவிர வேறு யாரும் மதுவிலக்குத் திட்டத்தை மாற்ற விரும்பார்கள் என்பது திண்ணம்.

குழந்தைகள் நலனுக்கு பனங்கற்கண்டு சிறந்தது

நிலக்கொடை வள்ளல்

திரு. ஷண்முகக் கவுண்டர்

திரு. ஷண்முகக் கவுண்டர் அவர்கள், திருச்சி மாவட்டம் கரூர் தாலுகாவைச் சேர்ந்த தென்னிலே எனும் இயற்கை வளம் கொழிக்கும் சிற்றூரில் மறைந்த திரு. அனுமந்த கவுண்டர் அவர்களின் செல்வக் குமாரராவார்.

இவர் வேட்டுவ கவுண்டர் வம்சத்தில் பிறந்த பெருந் தகையாளராவார். இவருடைய குடும்பத்தார் பாரம்பரிய மாகக் 'கொடைமடம்' உடைய பெரும் வள்ளல்களாக விளங்கி, தென்னிலேயைச் சுற்றியுள்ள பகுதிவாழ் மக்க ளிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர். அறப் பணியே ஆண்டவன் திருப்பணி எனும் கொள்கைச் சான்ருேராய் விளங்கும் திரு. ஷண்முகக் கவுண்டர் அவர்கள் 18—10—1963-ல் மாநில பனேவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்துக்கு மூன்று ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார். அன்னாரின் தொண்டும், கொடைத் திறனும் ஏனைய பனைமரச் சொந்தக்காரர்களுக்கும், நிலக்கிழார் களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமையுமென்பதில் ஐயமில்லே.

வள்ளல் பெருமகன் வாழ்கப் பல்லாண்டு!

காஞ்சீபுரம் கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கு லிமிடெட்

நெ. 1560

ஸ்தாபிதம் : 1915 தொலைபேசி எண் : 38

*

அதிகாரம் பெற்ற மூலதனம் ...	ரூ.	75,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ.	33,35,550
க்ஷேம நிதி ...	ரூ.	7,13,089
இதர நிதிகள் ...	ரூ.	3,79,552

கரண்டு டிபாசிட்டு ½% சேவிங்ஸ் டிபாசிட்டு 3%

*

இப்பாங்கியில் இட்டு வைக்கும் டிபாசிட்டுகளின் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

ரூ. 10,000-ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும்—

6 மாதத்திற்கு ...	4½%
5 வருடத்திற்கும், அதற்கு மேலும் ...	6 %

மற்ற பிக்சட் டிபாசிட்டுகளுக்கு—

1 வருடத்திற்கு ...	4½%
2 வருடத்திற்கு ...	4¾%
3 வருடத்திற்கும், அதற்கு மேலும் ...	5¼%

எஸ். எல்லப்ப முதலியார்,
தலைவர்.

குறிப்பு :—இப்பாங்கியில் 36 மாத காலத்துக்கு குறையாமல் இட்டுவைக்கும் பிக்சட் டிபாசிட்டுகளின் அசலுக்கும், வட்டிக்கும் சென்னை அரசாங்கம் பரிபூரண உத்திரவாதம் அளித்துள்ளது.

பாரதிய பனைவெல்ல சில்ப பவன்

திரு. கே. சம்பந்தம்

பனைத் தொழிலை எதிர்நோக்கியுள்ள பலதரப்பட்ட சிக்கல்களை (Problems) அலசி, ஆராய்ந்து தீர்வு காணவும், பனைத் தொழில் வல்லுநர்களையும், ஊழியர்களையும் பயிற்றுவிக்கவும் மத்திய அரசின் உணவு—விவசாயத் துறையினர் முடிவு செய்தனர். இதன் பயனாக 1948–49-ல் முதன் முதலாக 'மத்திய பனைவெல்லப் பயிற்சிக்கூடம்' ஒன்றை மைசூர் மாநிலத்தில் மூடுபத்திரி என்னுமிடத்தில் தோற்றுவித்தனர். சில காலத்திற்குப்பின் இந்நிலையம் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கடலூருக்கு மாற்றப்பட்டது. பனை, தென்னை, ஈந்து, கூந்தல் பனை ஆகிய நால்வகை மரங்கள் இருப்பதோடு, இவ்வூர் கடற்கரையோரத்தில் அமைந்திருப்பதால் பயிற்சி அளிப்பதற்கு சாதகமான இடமாகக் கருதப்பட்டது. மேலும் இங்கு பரம்பரைப் பனைத் தொழில் வல்லுநர்கள் நிறைந்துள்ளனர்.

இன்று பனைத் தொழில் வளர்ச்சி வேலைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும், அரசாங்கத்தில் பணியாற்றிவரும் வல்லுநர்களும் இப்பயிற்சிக்கூடத்தில் முறைப்படி பனைத் தொழிலைக் கற்றுத் தேறியவர்களாவர். கயிறு மூலம் பனை கடத்தல், சூப்பர் பாஸ்பேட் உபயோகித்துப் பதநீரின் சுண்ணச் சத்தைக் குறைத்துத் தெளிவித்தல், கால்மிதி இயந்திரத்தில் பனஞ்சீனி தயாரித்தல் போன்ற புதிய தொழில் நுணுக்கங்கள் இப்பயிற்சிக்கூடத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டன. முதன் முதலில் பனைத் தொழில் நுணுக்கச் சிக்கல்களை விஞ்ஞான ரீதியில் பரிசீலனை செய்ய ஆராய்ச்சிக்கூடம் ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டது. குடிசைத் தொழில்களில் முதன் முதலாகப் பனைத் தொழிலுக்குத்தான் ஆராய்ச்சிக்கூடம் நிறுவப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மின் சக்தியைக்கொண்டு தொழில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள அகில இந்தியக் கதர்—கிராமக் கைத்தொழில் குழுவினர், முதன் முதலில் பனைத் தொழிலுக்குத்தான் அனுமதி அளித்தனர்.

இந்நிலையத்தை மத்திய உணவு—விவசாய இலாகாவின் பனைவெல்ல ஆலோசகர் (Palmgur Adviser) அவர்கள் பரிபாலித்து வந்தார்கள். பாரதமெங்கும் உள்ள பனைத் தொழில் வல்லுநர்களும், ஊழியர்களும் கடலூர் நிலையத்தில் பயிற்சி பெற்று வந்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த கைக்காகித வல்லுநர் திரு. என். நாகராஜ ராவ் அவர்கள் இந்நிலைய முதல்வராகப் பொறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றினர். அவருக்குப்பின் திரு. பி. சி. ஜோஷி முதல்வராக நியமிக்கப்பட்டார்.

தகணூவுக்கு மாற்றம்

அடிக்கடி விஞ்ஞான சாலையுடன் தொடர்பு கொள்ளவும், எல்லா மாநிலத்தவரும் சுலபமாக வந்து பார்க்கத்தக்கதாகவும் இருக்கும் பொருட்டு இப்பயிற்சி நிலையம் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள தாணா மாவட்டத்தைச் சேர்ந்த தகணூவுக்கு 1954—55-ல் மாற்றப்பட்டது. இங்கு நால்வகைப் பனையின மரங்களும் ஏராளமாக இருப்பதால் பயிற்சி அளிப்பதற்கும், ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் சாதகமாக உள்ளது.

தகணூருக்கு மாற்றப்பட்ட பின்னர் பனைத் தொழில் ஆராய்ச்சிக்கூடம் புதிய விஞ்ஞான சாதனங்களுடன் விரிவாக்கப்பட்டது. இவ்வாராய்ச்சிக்கூடத்தையும், பயிற்சி நிலையத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்று திரு. பி. சி. ஜோஷி அவர்கள் இயக்குநராகப் பணியாற்றினர்.

பயனுள்ள பணிகள்

தகணூரிலுள்ள நிலையம் பலதிறப்பட்ட தொழில் நுணுக்கச் சிக்கல்களையும், பொருளாதாரப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவ்வப்போது பல புதிய மாற்றங்களையும், தொழில் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தி வருகிறது. இப்பயனுள்ள பணிகளால் பனைத் தொழிலில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதை எவராலும் மறுக்க இயலாது என்பது திண்ணம். இந்நிலையம் கீழ்க்கண்ட பணிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

1. விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவுகளைச் செயல் முறைக்கு உகந்ததாக்குதல்.

2. பனைத் தொழிலையும், இதில் ஈடுபட்டுள்ளோரையும் எதிர்நோக்கியுள்ள சமூக, பொருளாதார, தொழில் நுணுக்கச் சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணுதல்.

3. குறைந்த செலவில் உயர்ரகப் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல்; அதற்கான தொழில் நுணுக்க வழி முறைகளைப் பின்பற்றுதல்.

4. புராதன முறைகளிலுள்ள குறைபாடுகளை நவீன நுணுக்க முறைகள் மூலம் நிவர்த்தித்தல்.

5. பனையிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு மூலப்பொருளையும் உயர்ரக வணிகப் பொருளாக மாற்ற ஆராய்ச்சி செய்தல்.

6. ஒவ்வொரு பனையின மரத்திற்கும் தனித்தனியே மாதிரி வழிகாட்டி நிலையம் அமைத்து, அவ்வப்பிராந்தியத்தில் நிலவிவரும் அது சம்பந்தப்பட்ட சில்கல்களை ஆராய்ந்து தீர்வு காணுதால்.

வளர்ச்சி

1957—58-ம் ஆண்டு முதல் இப்பயிற்சிக்கூடம் ஒவ்வொரு வகையிலும் விரிவுபடுத்தப்பட்டு, பல புதிய அமைப்புகளுடன் இயங்கி வருகிறது. பனையிலிருந்து பெறப்படும் ஒவ்வொரு பாகத்தையும் பயன் பொருளாக மாற்றத் தனித் தனிப் பிரிவுகள் நிறுவப்பட்டு, அவ்வப்பொருள் பற்றிய பிரச்சினைகள் அனைத்தும் நுணுக்கமாக ஆராய்ந்து தீர்வு காணப்பட்டு வருகிறது. கைதேர்ந்த பரம்பரைத் தொழிலாளர்கள் பலர் வரவழைக்கப்பட்டு, அவர்களுடைய அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. முதன் முதலில் கிராமக் கைத்தொழில்களுள் ஒன்ருன பனைத்தொழிலில் மின்சக்தி பயன்படுத்தப்பட்டு உற்பத்தித் திறன், உற்பத்தி அளவு, தரம் முதலியன உயர்த்தப்பட்டன.

இவ்வாராய்ச்சி நிலையத்தின் பணிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை :—

1. ஆராய்ச்சி.
2. பயிற்சி.
3. வாணிப நுணுக்கம்.

ஆராய்ச்சி

அனைத்திந்திய அடிப்படையில் பனைத்தொழிலில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து தீர்வுகாணவேண்டும் என்பதே தலையாய நோக்கமாகும். பனங்கொட்டைகளை நட்டு வளர்ப்பதிலிருந்து பனைச்சாதி மரங்கள் உண்பொருளையும், உபயோகப் பொருளையும் அளிக்கும் வரையிலுள்ள சிக்கல்களையும், பனையேற்றுச் சிரமங்களையும் குறைக்கவும், அறவே நீக்கவும் ஆராயப்பட்டு வருகிறது. முக்கியமாகக் கீழ்க்கண்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

பனையேற்றம் :

1. பனைமரங்களைக் குட்டையாக வளரச் செய்தல்.

2. மரமேறும் சிரமத்தைக் குறைத்தல்.

பாளை சீவுதல் :

3. ஒவ்வொரு நாளும் இரண்டு, மூன்று தடவைகள் பனைமீது ஏறிப் பாளை சீவும் சிரமத்தைக் கூடுமான அளவு குறைத்தல்.

4. ஈச்சமரத்தில் ஒருநாள் பாளை சீவி, இருநாள் ஓய்வு கொடுப்பதற்குப் பதிலாகத் தினமும் பாளை சீவுதல் (Daily tapping).

பதநீர் ஊற்று :

5. உரமிட்டு, ஊறும் பதநீரின் அளவையும், சுவையையும், சீனிச் சத்தையும் அதிகரிக்கச் செய்தல் (to increase the percentage of sucrose).

6. கணிசமான அளவு ஓலைகளைவதன் (Pruning of leaves) மூலம் பதநீர்ச் சுரப்பைப் பெருக்குதல்.

பதநீர்ப் பாதுகாப்பு :

7. பதநீரைச் சளிக்கவைக்கும் நுண் கிருமிகளை (Micro biological problem) அகற்றுதல்.

8. மரத்திலிருக்கும்போதும், இறக்கிய பின்னரும் பதநீர் புளிப்படையாதவாறு பாதுகாத்தல் ; அதிக நேரம் பதநீரைச் சளிப்படையாமல் வைத்திருத்தல்.

பதநீர்ப் பொருள் பாதுகாப்பு :

9. பனைவெல்லம் கசிவடைந்து சேதமாவதைத் தடுத்தல்.

பனஞ்சீனி :

10. உயர்ரகப் பாகு தயாரித்தல்.

11. சூனியக் கொப்பரை மூலம் வெண்மையான படிகத்தை ஒத்த பனஞ்சீனி தயாரித்தல்.

எரிபொருள் சிக்கனம் :

12. பதநீர் காய்ச்சும் அடுப்பின் அமைப்பை மாற்றி, எரிபொருள் விரையமாவதைத் தடுத்தல்.

13. துரிதமாகவும், துப்புரவாகவும் பதநீர் காய்ச்சும் கொப்பரைகளைத் தயாரித்தல்.

பயிற்சி

ஒவ்வொரு வருடமும் எல்லா மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் பயிற்சியாளர்களுக்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பயிற்சியில் சேருவதற்குக் கடினமான நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. பயிற்சியில் சேர விரும்புவோர் குறைந்தபட்சம் பனைத் தொழிலில் மூன்றாண்டு அனுபவமும், பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க வேலைகளில் ஈடுபாடும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். கடின உழைப்புக்கு ஏற்ற உடல் வளமும், சித்தமும் உடையவர்களாவும் இருக்க வேண்டும். தாய் மொழியில் எழுதவும், வாசிக்கவும் தெரிந்திருக்கவேண்டும். பயிற்சியாளர்களை அந்தந்த மாநிலங்களில் இயங்கிவரும் மாநில பனைவெல்லக் கூட்டுறவுக் கூட்டமைப்பு (**State Palmgur Co-operative Federation**) அல்லது மாநில கதர்—கிராமக் கைத்தொழில் கழகம் தேர்ந்தெடுக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் போகவர மூன்றும் வகுப்பு புகைவண்டிக் கட்டணமும், பிரயாணம் செய்யும் தினம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் படியும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 உபகாரச் சம்பளமும் அளிக்கப்படும். பயிற்சி முடிந்தவுடன் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கி, பனைத் தொழில் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றத் தகுதியுடையவர்களாகத் தயார் செய்து அனுப்பப்படுவர்.

பயிற்சியின் பெயர்		பயிற்சி அளிக்கப்படும் இடம்	பயிற்சியின் கால அளவு
1. பனை வளர்ப்பு	...	தகனு (மஹாராஷ்டிரா)	4 மாதங்கள்
2. பனம் பான வகை தயாரிப்பு	...	,,	,,
3. ஜாம்—ஜெல்லி தயாரிப்பு	...	,,	,,
4. சூனியக் கொப்பரை முறையில் பனஞ்சீனி தயாரிப்பு	...	நிடதவோல் (ஆந்திரா)	,,
5. மிட்டாய்-பிஸ்கோத்து செய்தல்	...	உஜ்ஜெய்னி (மத்தியப் பிரதேசம்)	,,
6. பனங் கற்கண்டு	...	திருச்செந்தூர் (தமிழ்நாடு)	,,
7. பிரஷ் செய்தல்	...	தகனு	,,
8. ஓலைப் பொருட்கள்	...	தேதுவாசன் (குஜராத்)	,,
9. நார்ப் பொருட்கள்	...	தகனு	,,
10. ரிப்போர்ட்டர் பயிற்சி	...	தகனு	,,
11. பனையேற்று உதர்தரப் பயிற்சி :			
(அ) பனை	...	மாதவரம் (சென்னை)	,,
(ஆ) தென்னை	...	நஞ்சுண்டாபுரம் (கோவை மாவட்டம்)	,,
(இ) ஈச்ச மரம்	...	ஔரங்காபாத் (மகாராஷ்டிரா)	,,
(ஈ) கூந்தல் பனை	...	குன்னங்குளம் (கேரளா)	,,

இப்பயிற்சி நிலையத்தில் பயின்று தேறியவர்களை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், மாநில—மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுக் கூட்டமைப்புகளும், மாநில கதர்—கிராமக் கைத்தொழில் கழகமும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகின்றன.

பனைத் தொழில் கருவி உற்பத்திக்கூடம்

பனைத் தொழிலுக்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் செய்வதற்கும், செப்பனிடுவதற்கும் இக்கூடம் அமைக்கப்பட்டது. இது நவீன கருவிகளை நிர்மாணிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்களை ஆராய்ச்சித் துறையினருக்கு அவ்வப்போது செய்து கொடுக்கிறது. பெருவீத அளவில் பனஞ்சீனி தயார் செய்யும் சூனியக் கொப்பரைகள் இங்குதான் உற்பத்தி செய்யப்படுகின்றன. தர நிர்ணயம் (Standardization) செய்யப்படுகின்றன.

வாணிப நுணுக்கம்

உற்பத்தியாகும் பனைப் பொருட்களை வியாபார ரீதியில் லாபகரமாக விற்பனை செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்களைத் தயார் செய்யும் பொருட்டு வியாபாரப் பகுதி (Trading Wing) ஒன்றும் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேவையான உபகரணங்களையும், நவீன கருவிகளையும் வாங்கி விநியோகம் செய்து வருகிறது.

பாரதிய பனைவெல்ல சில்ப பவன் பனைத் தொழில் வளர்ச்சியில் அக்கரையுடனும், ஆர்வத்துடனும் பணியாற்றி பல புதுமைகளை உருவாக்கி வருகிறது. இதன் சேவை பனைத் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

விற்பனைக்குத் தயார்

பனைத் தொழில்	...	ரூ. 3—50
இனிக்கும் பதநீர்	...	ரூ. 0—50

திரு. கே. சம்பந்தம் அவர்கள் எழுதியுள்ள மேற்கண்ட இருநூல்களும் சேலத்தில் நடைபெறவிருக்கும் மூன்றாவது மாநில மாநாட்டில் விற்பனை செய்யப்படும். பனைத் தொழில் இசைத் தட்டுகளும் கிடைக்கும்.

வெளியிடுவோர் :

சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-17.

கோயமுத்தூர் ஜில்லா கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கு லிமிடெட்

போன் நெ. 2221 தபால் பெட்டி நெ. 100

பாங்கு ரோடு : கோயமுத்தூர்-1

சென்னை சர்க்கார் ரூ. 12,40,000-க்கு பங்குகள் எடுத்தும், மேற்பார்வை செய்தும் வருகிறார்கள்.

செலுத்தப்பட்ட பங்குத் தொகை	...	ரூ. 47,62,326
ரிசர்வ் பண்டு	...	ரூ. 9,65,712
இதர ரிசர்வ்கள்	...	ரூ. 7,33,194
நடப்பு மூலதனம்	...	ரூ. 4,29,78,865

வட்டி ரேட்—பிக்சட் டிபாசிட்டுகளுக்கு

3 மாதமும், 6 மாதத்திற்குள்ளும் ...	2½%	2 வருடமும், 3 வருடத்திற்குள்ளும் ...	4½%
6 மாதமும், ஒரு வருடத்திற்குள்ளும் ...	3 %	3 வருடமும், 5 வருடத்திற்குள்ளும் ...	5 %
1 வருடமும், 2 வருடத்திற்குள்ளும் ...	4 %	5 வருடமும், அதற்கு மேலும் ...	5½%

பிராவிடெண்டு டிபாசிட்டுகளுக்கு 4½% காம்பவுண்டு வட்டி கொடுக்கப்படும்.

நமது பாங்கில் 3 வருடமும், அதற்கு மேற்பட்ட காலங்களுக்கும் போடப்படும் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு அசலுக்கும், வட்டிக்கும் தமிழ்நாடு சர்க்கார் பாதுகாப்பு அளித்துள்ளார்கள்.

காரியதரிசி.

The Madurai District Central Co-operative Bank, Ltd., Madurai

Tele } Grams: "CENCOBANK"
Phone: 2134, 4023 & 4024

Post Box No. 14

***Branches:* DINDIGUL – THENI – PALANI**

Authorised Capital	... Rs. 1,00,00,000	Other Reserves	... Rs. 12,12,882
Paid-up Share Capital	... „ 49,23,900	Working Capital	... „ 5,49,16,948
Reserve Fund	... „ 13,23.349		

Bankers for all Co-operative Institutions in the District.

Drafts issued at Concessional Rates to all places of importance in the State.

ALL KINDS OF DEPOSITS ACCEPTED.

Rates of Interest on Fixed Deposit range from 3¾% to 5%

FIXED DEPOSITS GUARANTEED BY THE MADRAS STATE GOVERNMENT are now accepted at 5% P.A. for periods of three years and more.

Savings Bank Accounts

The Rate of Interest on Savings Bank Account has been raised to 3% P.A. from 1—4—'62.

Maximum amount that can be invested in the account has been enhanced to Rs. 20,000.

Weekly 2 Withrawals upto Rs. 1,000 allowed.

ENQUIRIES SOLICITED.

V. ALAGAPPAN, B.A., B.L.,
Secretary.

பனைத் தொழில் பொருளாதாரம்

குமாரி என். பாலா, (B.A.,)
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை.

[21—12—1963-ல் சென்னையிலுள்ள கல்லூரி மாணவ, மாணவியருக்கென மாநில சம்மேளனத்தாரால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற எத்திராஜ் கல்லூரி மாணவி குமாரி என். பாலாவின் சொற்பொழிவைக் கட்டுரை வடிவில் தொகுத்து வெளியிட்டுள்ளோம்—*ஆசிரியர்.*]

ஒரு நாட்டின் வளத்தை அளப்பதற்கும், அந்நாட்டின் முன்னேற்றத்தை உண்டாக்குவதற்கும் பொளாதார பலமே மூலகாரணமாக உள்ளது. பொருளாதார நிலை உயரவும், உறுதிப்படவும் வேண்டுமானால் உழவுத் தொழிலும், கைத்தொழில்களும் வளர்ச்சியடைய வேண்டும். ஆலைத் தொழிலுக்கும், உழவுத் தொழிலுக்கும் இடைப்பட்ட கிராமக் கைத் தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவை வளர்ச்சியுறுவதையும், நிலைபெற்று வளமுடன் இயங்குவதையும் பொறுத்தே கிராமப் பொருளாதார நிலை நிர்ணயிக்கப்படுகிறது. தேரின் சக்கரங்களை இணைத்துத் தாங்கும் அச்சாணி போன்று பனைத் தொழிலில் பதநீர் இறக்குதல் நடைபெற்று வருகின்றது. தேரின் மேற்பாகத்தைப் போன்று பனைவெல்லம், பனஞ் சீனி, பனங் கற்கண்டு தயாரிக்கும் தொழில்கள் சிறப்புடன் செப்பமுற நடைபெறுகின்றன. தேரின் உச்சியில் விளங்கும் கும்பத்தைப் போன்று பனைத் தொழிலினால் பெறும் வருவாய் பாரத நாட்டின் தேசிய செல்வத்தில் பங்கு பெறுகின்றது.

பயனுள்ள பனை

உலகில் 44° தென் அட்சரேகையிலிருந்து 55° வட அட்சரேகை வரை வியாபித்துள்ள பிரதேசங்களில் பனையின மரங்கள் வளர்கின்றன. இதே வெப்ப நிலையுள்ள இந்தியாவில் 18 கோடி பனையின மரங்கள் உள்ளன. இவைகளில் தமிழகத்தின் நிரந்தரச் செல்வமாக நான்கு கோடிப் பனை மரங்கள் உள்ளன. இவைகள் லட்சோபலட்சம் குடும்பங்களை வாழ வைக்கின்றன.

உச்சி முதல் நுனி வரை பயன்படும் பனை மரத்தின் வேரிலிருந்து பிரம்புப் பின்னல் வேலைகளும், வைரம் பாய்ந்த மரத்திலிருந்து வீடு கட்ட உத்திரங்களும், மட்டையிலிருந்து கட்டில் கட்ட நாரும், பத்தலிலிருந்து பனந்தும்பும், ஓலையிலிருந்து பல்வேறு பயன் பொருட்களும் செய்யப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் மேலாகப் பருவ காலத்தில் பதநீரும், இளநுங்கும், சுவையான பழமும், உணவாகக் கிழங்கும் அளிக்கின்றது.

பனை மரத்தின் நீண்ட—உறுதி வாய்ந்த, வைரம் பாய்ந்த அடிப்பாகத்தைப் பற்றித் திருமுருகாற்றுப்படையில் நக்கீரரும், சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும், பாடியுள்ளனர். திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் தமிழகத்தின் இயற்கை வளத்தைக் கூறுகையில் "தெங்கு பனை கன்னலொடு கமுகு செறி நாடு" என்று புகழ்கின்றார். "பனை மரமே, பனைமரமே! ஏன் வளர்ந்தாய் பனைமரமே?" என்ற பழம் பாடலொன்று பனையின் பொருளாதாரச் சிறப்பை விளம்புகின்றது; தெளிவுபட விளக்குகின்றது.

நோயற்ற வாழ்வு பெற...?

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. பிறந்த ஒவ்வொரு மனிதனும் பிணியின்றி வாழவே விரும்புகின்றான். அதற்குச் சத்துணவு தேவைப்படுகின்றது. பலவகைச் சத்துப் பொருட்களை பதநீரிலிருந்து பெறலாம். பதநீர் சர்க்கரை, கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ், புரத உப்புக்கள் முதலிய சத்துப் பொருட்கள் நிறைந்தது. பள்ளிச் சிறார்களுக்குப் பதநீர் வழங்கிப் பரிசீலனை செய்ததில் வாய்ப்புண் குணமாகிற்று; இருதயம் வலுவடைந்தது; முகப்பொலிவும், சருமப் பளபப்பும் ஏற்பட்டது; இரத்தம் விருத்தியாகி சுறுசுறுப்பு ஏற்பட்டது. பேராசிரியர் திருமதி கமலா சோஹோனி அம்மையார் அவர்கள் பதநீரைப் பகுத்தாரய்ந்து பரிசீலனை செய்து முன் கூறிய பல உண்மைகளைப் புலப்படுத்தியுள்ளார்கள்.

டைபாய்ட் சுரம் ஆரம்பமான காலத்திலும், முற்றிய காலத்திலும் பனைவெல்லம் கொடுக்கப் படுகின்றது; குழந்தைகளுக்கு மிட்டாயாகவும், மருந்துப் பொருளாகவும், சத்துணவாகவும் பதநீர், பனைவெல்லம், பனங் கற்கண்டு, பனஞ்சீனி முதலியன கொடுக்கப் படுகின்றது. எனவே நமது பொருளாதாரத்தில் பனைப் பொருட்கள் முக்கிய அங்கம் வகிக்

கின்றன என்று உறுதியாகக் கூறலாம். நோயற்ற வாழ்வுடன் நெடிது நாள் வளமாக வாழ விரும்புவோர் நிச்சயமாகப் பதநீர் பொருட்களை உண்ண மறுக்க மாட்டார்களென்றே நம்புகிறேன்.

திறமை மிக்க பனைத் தொழில் வல்லுநர்

இந்தியப் பனைத்தொழில் வல்லுநர்கள் தினம் ஒன்றுக்கு 70 பனைமரத்திற்கு மேலாகப் பாளை சீவும் திறமை வாய்ந்தவர்கள். இலங்கையில் இந்தியப் பனைத்தொழில் வல்லுநர்கள் கிடைக்காததால் 2 லட்சம் மரத்திற்கு மேல் பாளை சீவ முடியவில்லை என்றும், இந்தியாவிலிருந்து 1,000 பேர் வரவழைக்கப்பட்டால் ஏராளமான அளவு பதநீர் உற்பத்தி செய்ய முடியும் என்றும் இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

பொருளாதாரச் சிறப்பு

பெருகிவரும் நமது பொருளாதார நிலையை சமாளிக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், கரும்புச் சாகுபடிக்காக வீணுக்கப்படும் வளமுள்ள கழனிகளைத் தானிய உற்பத்திக்காக விடுவிக்கவும் திறமையுள்ள பனைத்தொழில் வல்லுநர்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கரும்பு வெல்ல நெருக்கடியைச் சமாளிக்கப் பனைவெல்ல உற்பத்தியைக் கணிசமான அளவு உயர்த்த வேண்டும். பயன்படுத்தப்படாத பனை மரங்களை உபயோகத்திற்குக் கொண்டுவர வேண்டுண்டும்.

அபிவிருத்தி

தமிழ் நாட்டில் 1958-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் என்ற பேரமைப்பு தோற்றுவிக்கப்பட்டு, பனைத்தொழிலபிவிருத்தி வேலைகளைச் செவ்வையாகவும், சிரத்தையுடனும் செய்து வருகின்றது. 1426 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், 6 மாவட்ட சம்மேளனங்களும், அனைத்திற்கும் மேலாக ஒரு மாநில சம்மேளனமும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 80,000 பனைத்தொழில் வல்லுநர்கள் அனுமதிச் சீட்டுப் பெற்று 32 லட்சம் பனைமரங்களிலிருந்து பதநீர் இறக்கி வருகின்றனர். தென்னைமரத்திலிருந்து பதநீர் இறக்கக்கோவை மாவட்டத்திலும், ஈச்ச மரத்திலிருந்து பதநீர் இறக்க வட ஆற்காடு மாவட்டத்திலும் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. தமிழகமெங்குமுள்ள பனையின மரங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டால் உற்பத்தி பெருகும்; நமது பொருளாதார நிலை உயரும்.

ஒவ்வொரு வருடமும் 1·8 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 36 லட்சம் மணங்கு பனை வெல்லம் உற்பத்தி செய்யப்படுகின்றது. 1960-61-ம் ஆண்டில் 5·25 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பனைவெல்லமும், ரூ, 5,000 பெறுமானமுள்ள பனங் கற்கண்டும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற 37 மேலை நாடுகளுக்கு பனந்தும்பும், பனையோலைப் பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் நாம் நமது அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்தலாம்.

பயனுள்ள பணி

இந்த ஆண்டு (1963) ஜூலை 4-ம் தேதியன்று நஞ்சுண்டாபுரம் தென்னை மர வழிகாட்டி நிலையத்திற்கு விஜயம் செய்த நமது துணை ராஷ்டிரபதி டாக்டர் ஜாஹிர் ஹுசேன் அவர்கள் பதநீர் அருந்திய பின்னர் பார்வையாளர் புத்தகத்தில், "கோயம்புத்தூரில் பயனுள்ள வேலை நடைபெறுகின்றது; எனக்கு அன்புடன் அளிக்கப்பட்ட பதநீரை அருந்தி மகிழ்ச்சியடைந்தேன்." என்று எழுதியுள்ளார்கள். காலஞ்சென்ற டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள், "கிராமங்களில் உள்ள மக்கள் பனைவெல்லம், பனஞ்சீனி உற்பத்தி செய்வதை ஒரு சிறந்த குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்; கரும்புச் சீனியும், வெல்லமும் பற்றுக்குறையாக ஆகும்போது பனைவெல்லமும் பனஞ்சீனியும் உதவியாக இருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். 'மதுவருந்தும் தீய பழக்கத்தைப் போக்கும் பணியில் பனைவெல்ல உற்பத்தி நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது' என்று ராஜாஜி அவர்கள் கூறியுள்ளார். எனவே பனைத் தொழில் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முக்கிய பங்கு கொண்டுள்ளது என்பதை உணரலாம். இப்பயனுள்ள பணியை நாமும் ஏற்போமாக.

திருச்சி மாவட்டத்தில் கரூர் தாலுகாவைச் சேர்ந்த தென்னிலையில் 18–10–'63-ல் மாநில சம்மேளனத்தின் பனந்துப்புக் கிளை நிலையத்தைத் துவக்கி வைத்து உரையாற்றிய பனைத்தொழில் தந்தை திரு. வே. வ. இராமசாமி அவர்கள் புறம்போக்கு நிலங்களிலுள்ள பனை மரங்கள் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களின் உடமையாக வேண்டும் என்றும், பதநீரைப் பானைகளில் எடுத்துச் சென்று விற்பனை செய்யும் முறை மாறி, பாட்டில்களில் அடைத்து நாகரீகமாக விற்கும் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பொருளாதார நிலை உறுதி அடைய

"பதநீர் இறக்கும் தொழிலாளர்களைத் தாழ்ந்தவாகளாகக் கருதும் நிலைமாறவேண்டும். பனையேறும்பொழுது தவறிக் கீழே விழுந்து ஊனமடைவோருக்கும், உயிர் துறப்போரின் குடும்பத்துக்கும் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். பதநீர் இறக்குவதற்கு ஒவ்வொரு மரமாக ஏறி இறங்கும் சிரமத்தைக் குறைக்க கயிற்றுப் பாலங்களையோ அன்றி மூங்கிற்பாலங்களையோ உபயோகித்து, நெருக்கமாக உள்ள பனை மரங்களை இணைத்துப் பனை கடக்கலாம். இத்தொழில் நசியாமலிருக்க மரமேறும் கருவி ஒன்றைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முன்வரவேண்டும். புதுமுறை அடுப்புகளையும், நவீன கொப்பரைகளையும் சாகய விலையில் வழங்கி, உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவேண்டும். பதநீர் காய்ச்சுவதற்குக் காடுகளில் சுள்ளி விறகுகள் சேகரிக்கத் தாராளமாக அனுமதி வழங்கவேண்டும். புறம்போக்கு நிலங்களில் திட்டமிட்டுப் பனங்கொட்டைகளை நட ஏற்பாடு செய்வதோடு பனை மரங்களை பாரபட்சமின்றி வெட்டுவதையும் தடுக்கவேண்டும்" என்று மாநில பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் பல மாநாடுகளின் மூலமாகவும், கருத்தரங்குகளிலும் வலியுறுத்திவருகிறுர்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் பனைத் தொழில் நிலைபெறும்; கிராமப் பொருளாதார நிலை உறுதிப்படும்.

எல்லோரும் பின்பற்றுக

தென்னிலை நிலக்கொடைவள்ளல் திரு. ஷண்முகக் கவுண்டர் அவர்கள் பனைத்தொழில் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய தொழிற்கூடங்களை அமைப்பதற்காக 3 ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்கியுள்ளார். இதைப்போன்று பனைமரச் சொந்தக்காரர்கள் தங்கள் பனைகளிலிருந்து இலவசமாகப் பதநீர் இறக்க பனைத் தொழில் வல்லுநர்களுக்கு விட்டுக் கொடுப்பார்களாயின் நாட்டின் தொழில் வளம் பெருகும்; சர்க்கரைத் தட்டுப்பாடு நீங்கும். நிலக் கொடை வள்ளலின் வழியை எல்லோரும் பின்பற்றினுல் பல சிக்கல்கள் தீரும்.

வாழ்க்கை நிலை உயர

சென்ற பல ஆண்டுகளாக தமிழகத்தில் பனைவெல்ல அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. இதனுல் தொழிலாளர்களிடையே ஒரு தன்னம்பிக்கையும், புத்துணர்ச்சியும் தென்படுகிறது. மதுவிலக்கால் பாதிக்கப்பட்ட இவர்களின் வாழ்க்கை நிலை கணிசமான அளவு சீரடைந்துள்ளது. இன்னும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, இத்தொழிலை வளர்க்க 1964-65-ம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 1,83,45,000 அனுமதிககப்பட்டுள்ளது இதைப் பாராட்டுவதோடு இன்னும் அதிக உதவி செய்து, ஆராய்ச்சிகள் பலவற்றை மேற்கொண்டு பனைப்பொருட்களை நவீன முறையில் உற்பத்தி செய்ய ஊக்குவிக்க வேண்டும். இதனுல் இவர்களின் வாழ்க்கை நிலை உயரும். நாட்டில் பொருளாதார வளமும் பெருகும்.

இறுவாய்

பயனுள்ள மரம் பனை. அடி முதல் நெடிய வளர்ந்துள்ள முடிவரை அன்றுட உபயோகத்தில் அளப்பரிய பங்குகொள்ளுகின்றது. பதநீரைப் பருகுவதால் காபி, தேயிலை முதலியவற்றை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யலாம். பலவகையிலும் நமது பொருளாதாரத்தைப் பனையைக்கொண்டு உயர்த்திக்கொள்ளலாம். இவ்விதப் பயன்களைக் கருதியோ என்னவோ வள்ளுவரும், "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றுல் செல்வம்-பெருந்தகை யான்கண்படின்" என்று கூறி மறைந்தார் போலும்! கட்டாந் தரையிலும் செழிப்புடன் வளரும் இப்பனை மரங்கள் இயற்கையன்னை அளித்த ஈடற்ற செல்வமாகும். கிராமங்களிலும் வாழும் பெரும்பாலான விவசாயிகள் ஒப்பற்ற ஓலைத் தொழிலைக் கற்று தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளலாம். அழியாச் செல்வமான பாடல்களைத் தாங்கிநிற்கும் ஏடு முதல் உண்ண உணவு வரை அழிக்கவல்ல மரம் வேறெதும் உளதோ? கூறுவீர்! பனைத்தொழில் நம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கும் சிறந்த தொழில். எனவே இம்மாதம் (23—12—1963) 23- நாள் நடைபெறவிருக்கும் தேசிய பனைவெல்ல தின விழாவில் நாம் அனைவரும் பங்குகொண்டு பனைப்பொருட்களை அதிக அளவு உற்பத்தி செய்து, நாட்டுக்கு உதவ உறுதி கொள்ளுவோமாக. உடலுக்கு ஆரோக்கியமும், இதயத்துக்கு இதமும் அளிக்கும் பதநீரைப் பருகி, அயராது உழைக்க முன் வருவோமாக.

வணக்கம்.

இந்தியாவிலுள்ள குடிசைத் தொழில்களில் முக்கியமானது பனைத்தொழில் இதனுல் ஏராளமான ஏழைக் குடும்பத்தினர் வேலை பெறுகின்றனர்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்.

கதர் நூற்போருக்கு கடனுதவி

Copy of Letter No. KCO-4 BHR MISC 63-64, dated 6—11—1963 from the Director, Khadi Co-ordination, Khadi and Village Industries Commission, Bombay-56 to All State Boards.

Sub: Eligibility of relatives of spinners holding shares in Co-operative Societies, for share capital loan.

Ref: Your Letter No. 95 63-64, dated 17—10—1963 addressed to the Chairman, Khadi and Village Industries Commission.

I am directed to inform you that share capital loans may be sanctioned to a share holder who is a member of the family of a spinner and holds an authority from the spinner to that effet.

Steps are being taken to get the same incorporated in the model by-laws.

(True Copy)

Copy of Endt. No. 28482 C1 63-1, dated 30th November 1963 of the Madras State Khadi and Village Industries Board, Madras-9.

Copy communicated to the Director of Khadi and Secretary, Village Industries Wing, for information.

V. PADMANABHAN,
Secretary.

இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்,

6, மேல மாசி வீதி, மதுரை - 1.

தந்தி: "RAMCENBANK" தொலைபேசி: 2444 தபால் பெட்டி: 96

கிளைகள்: காரைக்குடி & ஸ்ரீவில்லிபுத்தூர்

தலைவர்: திரு. ஏ. கே. வேங்கிடப்ப நாயக்கர்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	40·00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	26·45 ,,
சேம நிதி	...	ரூ.	6·98 ,,
இதர ரிசர்வ் நிதிகள்	...	ரூ.	8·05 ,,
அலுவல் நிதிகள்	...	ரூ.	262·69 ,,

சர்க்கார் எடுத்துள்ள பங்குகள் ரூ. 2.70 லட்சம்

மாவட்டத்திலுள்ள எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், மத்திய பாங்காய் செயலாற்றுகிறது.

எல்லாவித டிபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பிக்சட் டிபாசிட்டுகளின் வட்டி விகிதங்கள் 3% முதல் 5½% வரை.

3 வருடங்களுக்கும் அதற்கு மேலும் உள்ள காலங்களுக்கு பெற்றுக்கொள்ளப் படும், ஃடி டிபாசிட்டுகளுக்கு சென்னை அரசாங்கம் உத்திரவாதம் அளித்துள்ளது.

மற்ற விபரங்களுக்கு தயவுசெய்து விண்ணப்பிக்கவும்.

எஸ். சிவராஜன், பி.ஏ., எச்.டி.சி.,
காரியதரிசி.

100 மரம் ஏறும் பயிற்சித் திட்டம்

பனிச்சமேடு, தென்னாற்காடு மாவட்டம்

கடந்த 15 ஆண்டு காலமாக மத்திய அரசாங்கத்தினர் பனைப் பொருள் அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொண்டு பலவித ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இவ்வாராய்ச்சிகள் தகணூரிலுள்ள பாரதீய பனைவெல்ல சில்ப பவன் மூலமாகவும் மற்றும் இந்தியாவிலுள்ள இதர ஆராய்ச்சிக் கூடங்கள் மூலமாகவும் பலவித பனைத்தொழில் நுணுக்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. அவைகளில் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று "மரம் ஏறுதல்".

பனைத் தொழிலில் துரித வளர்ச்சி ஏற்படாமைக்கு சில முக்கியமான சங்கடங்களே காரணமாயுள்ளன. இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பனைவெல்ல உற்பத்தியாளர்கள் இவைகளை நிவர்த்திக்க எவ்வித முயற்சியும் எடுக்காது, ஒரு சிலர் தொடர்ந்து தொழிலைச் செய்தும், சிலர் சிரமங்கள் காரணமாக தொழிலை விட்டு விடும் நிலையிலும் இருந்து வருகின்றனர். புராதன முறையில் 30 அடி முதல் 40 அடி வரை உயரமுள்ள பனைமரங்களில் தினமும் இரண்டு முதல் மூன்று முறை ஏறி பாளை சீவ வேண்டியிருக்கிறது. நாள் ஒன்றுக்கு சுமார் 30 முதல் 40 மரங்களில் ஒவ்வொரு மரமாக ஏறி, பாளை சீவி பதநீர் இறக்கும்போது அதிக உடலுழைப்பும், சக்தியும் காலமும் வீணாகிறது. அதிக உழைப்பால் அதிக சோர்வு ஏற்படுவதோடல்லாமல், இறுதியில் எய்தும் ஊதியமோ மிகக் குறைவு. நவீன முறையில் மரத்திற்கு மரம் கயிறு கட்டி, கயிற்றின் மூலம் ஒரு மரத்தில் இருந்து மற்ற மரத்திற்கு சென்று பதநீர் இறக்கும் புராதன முறையில் 30 முதல் 40 மரங்கள் ஏறி வந்த அதே நபர் நவீன முறையில் சுமார் 60 மரங்கள் முதல் 100 மரங்கள் வரை ஏறி பாளை சீவி பதநீர் இறக்கி, தன் வருவாயை மேலும் இருமடங்கு அதிகரித்துக் கொள்ள வாய்ப்புண்டு.

எனவே அதிக சிரமத்தையும், குறைந்த ஊதியத்தையும் பெற்றுவரும் புராதன முறையைக் கையாண்டு வரும் தொழிலாளர்கள் கயிறு மூலம் பனைகடக்கும் முறையைக் கையாண்டால் ஒரு நாளில் தற்போது புராதன முறையில் தங்கள் ஏறியிறங்கும் மரங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக இரண்டு அல்லது மூன்று மடங்கு ஏறியிரங்கலாம். நவீன முறையினால் மரம் ஏறும்போதும் உடல் அலுப்புக் குறைகிறது; நேரம் மீதமாகிறது. அதிக மரம் சீவி, கூடிய பதநீரைச் சேகரிக்க முடிகிறது. வருவாய் உயர்கிறது. புராதன முறையைக் கைவிட்டு நவீன முறையைக் கையாண்டால் மேற்கூறிய பலனை நேரிடையாகக் காணலாம்.

அஃதெங்ஙனமெனில் ஒரு தோப்பில் உள்ள 100 மரங்களில் ஒரு ஆள் ஏறி பாளை சீவி, பதநீர் இறக்க வேண்டுமானால் அவரது சக்திக்குரியதுபோக எஞ்சிய மரங்களை வேறு ஆள் ஏறவேண்டும். கயிறு கட்டும் முறையில் ஒரே மனிதனால் செய்யப்படும் வேலை தற்போது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்களால் செய்யப்படுகிறது. ஒரு நபர் பெறும் ஊதியம் புராதன முறையைக் கையாளுவதால், பலரால் பகிர்ந்து கொள்ளப் பட்டு, அந்த ஒரு வேலையில் ஈடுபட்ட முதல் நபரின் வருவாயும் மற்றவர்கள் வருவாயும்

பற்றுக்குறையாகிறது. புராதன முறையைக் கையாண்டால் பற்றுக்குறைபோய் ஒரு நபர் வருவாயை விட கயிறு மூலம் சுமார் 60 முதல் 100 மரம் ஏறும்போது வருவாய் மேலும் இரு மடங்கு உயர்வடைகிறது.

எனவே இவ்வித இழப்பைத் தடுக்கவும், பனைத் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் நவீன முறையைக் கையாளவேண்டிய அவசியத்தைத் தற்போது கூறிவருகிறது. இம்முறையைக் கையாளுவதும் கடினமன்று. ஒரு தோப்பில் உள்ள மரங்கள் தனி மனிதனால் ஏறியிறங்கும் சக்திக்கும் அப்பால், அதாவது 30 அல்லது 40 மரத்திற்கு மேலிருந்தால், அவற்றை கயிற்றின் மூலம் இணைத்து ஒரு மரத்திலிருந்து அடுத்த மரத்திற்கு செல்ல இறங்கி ஏறாமல் நேரத்தையும், உடலுழைப்பையும் மீதப்படுத்தி, கயிற்றின் மூலம் கடந்து அடுத்த மரத்தை அடையவேண்டும். முதலில் கயிற்றின் மூலம் உயரத்தில் நடப்பது பயமளிப்பது என்றால் தரை மட்டத்திலிருந்து 5 அல்லது 6 அடி உயரத்தில் பழகிக்கொண்டு பிறகு உயரத்திலேயே கயிற்றின் மூலம் எல்லா மரங்களுக்கும் செல்லலாம்.

உதாரணமாக துவி சக்கரவண்டி விடுவதை எடுத்துக் கொண்டால் ஒரு மனிதன் கூட ஆரம்பத்திலேயே தானாக ஓட்ட முடிவதில்லை. முதன் முதலில் பின்னால் இரண்டு ஆட்கள் பிடித்துவர ஆரம்பித்து, நாளடைவில் ஒரு ஆள் பாதுகாவலுக்கு பின்னால் வர சிறிது தூரம் தானாக மிதித்து கடப்பதும், சிறிது தூரம் பின்னால் வருபவரின் துணை கொண்டும் பயின்று இறுதியில் தானே எங்கும் பிறர் துணையின்றி செல்லும் நிலைமையைப் பெறுதல் போல் மரத்தினை கயிற்றால் கடப்பதும் மிக எளிது.

இதுவரை பரவலாக இம்முறையை தமிழகத்திலுள்ள மாவட்டங்களில் ஐந்தாறு ஆண்டுகளாக இதற்கெனத் தனியாகப் பயின்ற பனைத் தொழில் போதகர் ஒருவரைக் கொண்டு முக்கியமான பல சங்கங்களில் ஓரிரு நாட்கள் நேரிடைப் பயிற்சி செய்து காண்பித்ததில், பனைத் தொழில் வல்லுனர்கள் ஒருவரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பனையேற்று பருவகாலம் முழுவதும் பயிற்சியாளர்களைக் கொண்டு கயிறு கட்டி மரத்திற்கு மரம் கயிறு மூலம் செல்ல பயிற்சியளித்து, தொடர்ந்து 4 மாதங்கள் மரத்திற்கு மரம் கயிறு மூலம் சென்று பாளை சீவி பதநீர் இறக்கி வந்தனர். இதன் பலனை இதனைக் கண்காணித்து வந்த அவ்வட்டாரத்தில் இருந்த ஏனைய சங்கங்கள் இம்முறையில் உள்ள நன்மைகளைக் கண்டு அவர்களும் பின்பற்ற ஆரம்பித்தனர்.

பல மாவட்டங்களிலுள்ள ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் 100 மரமேறும் பயிற்சித் திட்டத்தை ஏற்று தங்கள் சங்கங்களில் நடத்தத் தயங்கின.

அதுகாலை தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பனிச்சமேடு பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்திலுள்ள திரு. அரிபுத்திர கிராமணி அவர்கள் இத்திட்டத்தை தங்கள் சங்கத்தில் ஏற்றுநடத்த முன்வந்து தனக்கு சொந்தமான 3,000 பனை மரங்களை பயிற்சி நடத்த நியாயமான குத்தகைக்குக் கொடுத்துத் தனது சங்கத்திலிருந்தும் அருகாமையிலுள்ள இதர சங்கங்களிலிருந்தும் 25 பனைத் தொழில் வல்லுனர்களை ஊக்குவித்து இம்முறையில் தொடர்ந்து 4 மாதங்கள் பயிற்சி பெறத் தூண்டியும், இத்திட்டம் செயல்படுவதற்குண்டான இடத்தையும் இலவசமாகக் கொடுத்துதவினார்கள். அங்குள்ள மரங்கள்

சற்று உயரமாக இருப்பினும் கயிற்றுல் மரங்களைக் கடக்கும் முறைக்கு சாதகமாக இருந்தது.

காதி கமிஷன் மான்யம் :—பயிற்யாளர்களுக்கு உபகாரச் சம்பளம் தலா மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் வீதம் 25 நபர்களுக்கும், கயிறு ஏனைய இதர கருவிகள் வாங்க மான்யமும் மேற் பார்வை புரிவதற்கு வேண்டிய வல்லுனர்கள் பயிற்சியளிக்க 100 மர பயிற்சியாளர் ஆகியோர் களுக்கு உண்டான மாதச் சம்பளம் மற்றும் இதர செலவினங்களுக்கும் மான்யமாக சென்னை மாநில கதர்—கிராம கைத்தொழில் போர்டு மூலம் மாநில பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்திற்கு ரூ. 17,920-ஐ நூறு மரம் ஏறும் பயிற்சித் திட்டத்தை 4 மாதங்கள் நடத்துவதற்கு மாண்யமாக வழங்கியுள்ளது. அதைக்கொண்டு தமிழ்நாடு பனைத் தொழில் ஊழியர் பயிற்சி நிலையம் இத்திட்டத்தை ஏற்று நடத்தியது.

1—12—1962-ல் 3000 பனை மரங்களைப் பயிற்சி காலத்திற்கு திரு. அரிபுத்திர கிராமணி அவர்களிடமிருந்து ரூ. 2,250-க்கு குத்தகைக்கு எடுத்து, மேற்படி மரங்களில் 10 நாட்கள் வரிசை எண் போடப்பட்டது. மரங்களில் கட்டுவதற்கு தேவையான இழை கயிறும், முப்பிரி கயிறு 27970 அடியும் வாங்கிய வாங்கிய மொத்த ரூ. 3,189—97 ந.பை வாங்கிய கயிற்றைக் கொண்டு 25 பயிற்சியாளர்களும் ஒருவருக்குள் ஒருவர் உதவியாக இருந்துகொண்டு 20 தினங்களுக்குள் 619 மரங்களில் கயிற்றைக் கட்டி அத்துடன் பதனீர் இறக்குவதற்குத் தேவையான முன்னேற்பாடான வேலைகளையும் செய்து வந்தனர்.

லைசென்ஸ் வாங்கப்பட்ட விதம் :—பயிற்சி பெற்ற 25 நபர்களும் முறையே பனிச்சமேடு, செய்யாங்குப்பம், மரக்காணம் ஆகிய ஊர்களின் பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களின் மெம்பராக உள்ளவர்கள். இவர்களில் ஓரிரு நபர்கள் தவிர ஏனையோர் அந்தந்த சங்கங் களில் பதனீர் இறக்கக் கடந்த ஆண்டு லைசென்ஸ் பெற்றவர்கள்.

தென்னாற்காடு மாவட்டத்தின் கிராமக் கைத்தொழில் அலுவலகத்தைச் சார்ந்த, அவ்வட்டார கூட்டுறவு சீனியர் இன்ஸ்பெக்டர் அவர்களால் 100 மரம் ஏறும் பயிற்சி நிலையத்தைச் சார்ந்த 25 நபர்களுக்கும் லைசென்ஸ் வழங்கப்பட்டது.

குத்தகைக்கெடுத்த 3000 மரங்களில் தலா பயிற்சியாளர்களுக்கு 100 மரங்கள் வீதம் 2500 மரங்கள் பதனீர் இறக்குவதற்கு உபயோகிக்கப்பட்டது. எஞ்சிய 500 மரங் களில். பயிற்சி நிலையத்திற்குத் தேவையான கொட்டகைகள் அமைக்க ஓலை மட்டைகளும், கிழங்கு பயிரிட பனம் பழங்களுமாக வெட்டிக் கொள்ளப்பட்டன.

செயல் குறிப்பு :—பனிச்சமேட்டில் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் தென் ஆற்காடு கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. C. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. 25 பயிற்சியாளர்களும் ஆரம்பத்தில் மரங்களில் கயிறு கட்டும் முறை பற்றியும் கயிற்றின் மூலம் கடந்து அடுத்து மரத்துக்குச் செல்லும் பயிற்சியை 100 மரம் ஏறும் பயிற்சி ஆசிரியர் மூலம் ஒரு மாத காலத்திற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்துடன் பயிற்சியாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மரங் களில் பாளைகளைப் பக்குவப்படுத்தி முன்னேற்பாடான வேலைகளையும் செய்து வந்தனர். 5—1—'63 முதல் பதனீர் இறக்க ஆரம்பிக்கப்பட்டது.

பதனீர் சேகரிக்கவும் ஓலை மட்டைகள் சேகரிக்கவும் 10 சிறுவர் சிறுமியர்கள் தினக் கூலிக்கு அமர்த்தப்பட்டனர். பதனீர் காய்ச்சுவதற்கு ஆரம்பத்தில் 2 பெண்களி லிருந்து 8 பெண்கள் வரை அமர்த்தப்பட்டனர். சர்க்கரை, கற்கண்டு ஆகியவை செய்ய

தினக் கூலிக்கு 3 ஆண்டுகள் நியமிக்கப்பட்டனர். இறக்கப்பட்ட பதனீர் முழுவதும் ஆரம்பத்தில் வெல்லமாகக் காய்ச்சப்பட்டது வெல்லத்தின் தரம் உயர்ந்ததாக இல்லா திருந்தாலும் இருப்பு வைப்பதற்கு ஏற்றதாக இல்லாதபடியாலும் பதனீர் முழுவதும் பாஸ்பாரிக் அமிலம், 'டிரிபுன் சூப்பர் பாஸ்பேட்' போட்டு சுண்ணம் நீக்கப்பட்டு கற்கண்டு பாகிற்காக 'U' வடிவ கற்கண்டு பாத்திரத்திலும், பெரிய பானைகளிலும் ஊற்றி வைக்கப் பட்டது. கற்கண்டு விளைவதற்கு ஆரம்பத்தில் காரை முள்ளும், கடைசியில் சிவனர் கொரண்டியும் உபயோகிக்கப்பட்டது. பொதுவாக காரை முள்ளில் படிந்த கற்கண்டு படிவங்களை எடுக்க சிறிது சிரமமிருப்பினும் படிவங்களின் உருவத்தையும், அளவையும் காணும்போது காரை முள்ளினால் உண்டான சிரமம் மறைந்து உள்ளம் பூரிக்கும். கற்கண்டு எடுத்து எஞ்சிய பாகைக் காய்ச்சி சரள் கற்கற்டும், பின்னர் பழுப்பு நிற சர்க்கரையும் செய்யப்பட்டன. அதிலிருந்து மிஞ்சிய பாகைக் காய்ச்சி நல்லெண்ணை ஆட்டும் தேவைக்கு நாட்டு செக்குகளுக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி பாகுகளைக் காய்ச்சுவதற்கு இரண்டு கூட்டுறவு அடுப்புகளும், 3 அடி வட்டக் கொப்பரைக்குண்டான 6 சலாமத்து அடுப்புகளும் கட்டப்பட்டன. பதனீர் காய்ச்சுவதற்கு பனை மரங்களிலிருந்து கிடைத்த ஓலை மட்டை பன்னடை ஆகியவையும், பற்றுக்குறைக்கு சவுக்கு செற்றை (சரகு,) தென்னை உறி மட்டை முதலியவைகளும் வாங்கப்பட்டன.

நிலைய உற்பத்தி (பயிற்சி காலம் மட்டும்):

5—1—'63 முதல் 16—4—'63 வரை நிலையத்தின் உற்பத்தி விபரம்

(1)	பதனீர்	...	72594 கிலோ கிராம்	500 கிராம்
(2)	பனைவெல்லம்	...	5734 ,,	100 ,,
(3)	கற்கண்டு பாகு	...	4553 ,,	
(4)	சர்க்கரை	...	11 ,,	450 ,,

16—4—63-ல் பயிற்சி காலம் முடிந்ததும், 16—4—,63 17—4—'63 ஆகிய இரு தினங்களும் பயிற்சியாளர்களுக்கு மரத்தில் கயிறு கட்டவும், கயிற்றில் மரங்கூந்து பாளை சீவவும் கதர் கமிஷன் ரீஜினல் ஆர்கனைஸர் திரு. J. B. மங்கேலா அவர்களின் முன்னிலையில் தேர்வு நடத்தப்பட்டது. அதன்போது தேர்வில் கலந்த 24 பேரும் தேர்ச்சி பெற்றனர்.

பயிற்சி காலம் முடிந்த பிறகு (16—4—'63-க்குப் பிறகு) பயிற்சியாளர்களுக்கு தொடர்ந்து தொழில் வாய்ப்பு கொடுக்கும் பொருட்டு, பயிற்சிக்குக் குத்தகை எடுத்த மரங்களில் மேற்கொண்டு பதனீர் இறக்க வாய்ப்பிருந்தாலும் குறிப்பிட்ட பயிற்சியாளர்களை வைத்துக் கொண்டு மாதச் சம்பளம் ரூ. 50 வீதம் கொடுத்து 7—6—'63 முடிய பதனீர் இறக்கிக் கற்கண்டு பாகு தயார் செய்யப்பட்டது. மேலும் ஆரம்பத்தில் காய்ச்சி ஊற்றி வைக்கப்பட்ட பாகிலிருந்து அன்றுடம் கற்கண்டு எடுக்கப்பட்டது. இதற்குண்டான செலவினத்தை நிலைய உருவாயிலிருந்தே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

5—1—'63 முதல் 31—10'63 முடிய உற்பத்தியான பொருள்களின் விபரம் :—

		கிலோ கிராம்	கிராம்
பதனீர்	...	114564	500
பனைவெல்லம்	...	5734	100
பாகு வெல்லம்	...	4355	500
முதல்தர கற்கண்டு	...	1432	550
சரள் கற்கண்டு	.	723	500
சர்க்கரை	.	589	950

பனிச்சமேடு வட்டாரத்தில் வடம் போட்டு மரம் ஏறும் பழக்கமுள்ளபடியால் பயிற்சி காலத்தில் மரமேறிகளுக்கு மரங்களில கயிறு கட்டும்போது எளிதாக இருந்தது' வடம உபயோகிப்பவர்கள் இரண்டு கைகளையும் மரத்திலிருந்து நீக்கி எந்த இடத்திலும் நிற்கலாம். ஆயினும் ஒரு மரத்திலிருந்து மற்ற மரத்திற்குக் கயிறு மூலம் போகும் போது மரம் ஒரே அளவாக இல்லாமல் சற்று உயர்ந்துள்ள மரங்களில் ஏறும்போது வடத்தை உபயோகித்து ஏறியிறங்கி மறு முறை கயிற்றை அடைந்து கயிற்றின் மூலம் அடுத்த மரம் செல்லும்போது வடம் உபயோகிப்பது சற்று கடினமாக இருந்தது.

பனை மரங்களில் தென்னை, ஈந்து, போன்று எல்லா மரங்களிலும் ஒரே சமயத்தில் பாளை சீவ இயலாது. காரணம் அலகுப் பனையில் பாளை முன்னதாகவும் பருவப் பனையில் பின்புமி வருவதோடு, எல்லா மரங்களிலும் ஏக காலத்திதில் பாளை வருவதில்லை. அதனல் இடையிடையே பாளை வராத மரங்களையும் கயிறுகளால் இணைகக வேண்டியதானது ஆரம்பத்தில் சிறிது சிரமத்தைத் தந்தாலும், பின்னல் பாளை வரும்போது உபயோகமாக முடிந்தது.

பரிசளிப்பு விழா :

இந்நூறு மரம் ஏறும் பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக முடிவதற்குக் காரணமாயிருந்த பயிற்சியாளர்களை ஊக்கப்படுத்தும நிமித்தம் பயிற்சி காலத்தில் அதிகப் பதநீர் இறக்கிய நபருக்கும், அதிக மரத்தில் பாளை சீவிய நபருக்கும பரிசளிப்பதற்காக தென்னுற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. K. J. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் ஒரு விழா 16—5—1963-ல் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்போது தமிழ்நாடு பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளன நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. அ. ஆனையப்ப கிராமணி அவர்கள் வரவேற்பளிக்க, மாநில கதர் கிராமக் கைத்தொழில் போர்டு டிபுடி டைரக்டர் திரு T. V. ராமானுஜம் அவர்களும் மாவட்ட கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. S. பாலசுப்பிரமணியன் அவர்களும, மரக்காணம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. வேணு கவுண்டர் அவர்களும் தமிழ்நாடு பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசி திரு. K. சம்பந்தம் அவர்களும், நலலுரையாற்றினர். அவ்வட்டார பொது மக்களும் மரமேறும் தொழிலாளரும் குழுமியிருந்தனர். விழாவின் இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கீழ்க்கண்டோருக்குப் பரிசுகள் வழங்கினுர்கள் :—

பயிற்சிக் காலத்தில் (102 நாளில்) அதிகப் பதநீர் (6,689½ கி. கி.) இறக்கியதற்காக திரு. கி. இராமசாமி கிராமணிக்கு

முதற் பரிசு :—

(1)	பனைவெல்லங் காய்ச்சும் கொப்பரை	...	1
(2)	நெருப்புச் சல்லடை	...	1
(3)	வாளி	...	1
(4)	தீத்தள்ளி		1
(5)	சாம்பல் அள்ளி	...	1
(6)	குவளை	...	1

இரண்டாவதாக அதிகப் பதநீர் (4,475 கி.கி.) இறக்கிய திரு. அ. தட்சிணுமூர்த்திக்கு

2-வது பரிசு :—

(1)	பனைவெல்லம் காய்ச்சும் கொப்பரை	...	1

பயிற்சி காலத்தில் (102 நாட்களில்) அதிக மரமாக 102 மரங்கள் ஏறி பதநீர் இறக்கியதற்காக திரு. மு. கிருஷ்ணப்ப கிராமணிக்கு 3-வது பரிசாக பனைவெல்லங் காய்ச்சும் கொப்பரை ஒன்று அளிக்கப்பட்டது.

புள்ளி விவரம் 1

மரம் ஏறுபவர்களின் வயது வாரி விவரம்

18 முதல் 30 வயது வரை : 16 பேர்கள்

1. அ. அழகேச கிராமணி
2. ர. ரத்தின கிராமணி
3. மு. கிருஷ்ணப்ப கிராமணி
4. க. முனிசாமி கிராமணி
5. ம. ரத்தின கிராமணி
6. ந. இராமச்சந்திர கிராமணி
7. அ. தட்சிணாமூர்த்தி கிராமணி
8. ம. கணபதி கிராமணி
9. *வெ. பெருமாள் கிராமணி
10. கி. சுந்தரமூர்த்தி கிராமணி
11. செ. இராஜமன்னார் கிராமணி
12. ப. அரிதாஸ் கிராமணி
13. வ. ஏகாம்பர கிராமணி
14. மு. சுப்பிரமணிய கிராமணி
15. ந. குப்புசாமி கிராமணி
16. மு. குப்புசாமி

31 முதல் 40 வயது வரை : 8 பேர்கள்

1. கிருஷ்ணப்ப கிராமணி
2. த. சக்கரை கிராமணி
3. த. சடையாண்டி கிராமணி
4. கி. ராமசாமி கிராமணி
5. க. சீனுவாச கிராமணி
6. தி. சுந்தரமூர்த்தி கிராமணி
7. தி. துளசி
8. மா. பூங்காவனம்

41 முதல் 45 வயது வரை : 1 நபர்

1. தொ. முனுசாமி கிராமணி

* வெ. பெருமாள் அவர்கள் 8—2—63-ம் தேதி முதல் உடல் நலக் குறைவினால் பயிற்சியில் கலந்து கொள்ளவில்லை.

புள்ளி விவரம் 2

15 தினங்களுக்கொருமுறை பதநீர் உற்பத்தி அளவு (பயிற்சி காலம் மட்டும்)

		கிலோ கிராம்
ஜனவரி—		
5 முதல் 15 தேதி வரை	...	379·500
16 முதல் 31 தேதி வரை	...	3852·000
பிப்ரவரி—		
1 முதல் 15 தேதி வரை	...	7757·000
16 முதல் 28 தேதி வரை	...	10629·000
மார்ச்—		
1 முதல் 15 தேதி வரை	..	15660·000
16 முதல் 31 தேதி வரை	...	15802·000
ஏப்ரல்—		
1 முதல் 16 வேதி வரை	...	18515·000
மொத்தம்	...	72594·000

பயிற்சி காலம் முடிந்த பிறகு :

		கிலோ கிராம்
17—4—'63 முதல் 30—4—'63 வரை	...	15989·000
1—5—'63 முதல் 15—5—'63 வரை	...	14043·000
16—5—'63 முதல் 31—5—'63 வரை	...	9505·000
1—6—'63 முதல் 8—6—'63 வரை	...	2543·000

(உற்பத்தி பற்றிய) புள்ளி விவரம் 3

(1) பயிற்சி காலத்தில் ஒரு மரத்தின் சராசரி பதநீர் உற்பத்தி $36\frac{1}{4}$ கிலோ கிராம்.

பருவகாலம் முடிய ஒரு மரத்தின் சராசரி பதநீர் உற்பத்தி $54\frac{3}{4}$ கிலோ கிராம்.

(2) பயிற்சி காலத்தில் (நான்கு மாதம்) ஒரு நபர் ஏறிய சராசரி மரம்—83.

பருவகால முடிவில் (6 மாத காலத்தில்) சராசரி ஏறிய மரம்—87.

(3) பயிற்சி காலத்தில் (பாளை சீவிய 102 நாளில்) ஒரு நபரின் சராசரி பதநீர் உற்பத்தியளவு 3,211 கிலோ கிராம்.

பருவகாலம் முழுவதும் ஒரு நபரின் பதநீர் உற்பத்தியளவு 2,313 கிலோகிராம்.

(4) பயிற்சி காலத்தில் ஒரு நபரின் ஒரு நாளைய சராசரி பதநீர் அளவு $31\frac{1}{2}$ கிலோ கிராம்.

பருவகாலம் முழுவதும் $34\frac{1}{2}$ கிலோ கிராம்.

குறிப்பு: குத்தகைக்கு எடுத்த மரங்களில் பெரும்பாலான மரங்கள் இந்த ஆண்டில்தான் முன்த முறையாக பாளை சீவப்பட்டதன் காரணமாக பதநீர் உற்பத்தி குறைவாகக் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே பதநீர் இறக்கப்பட்ட மரங்களாக இருந்திருப்பின் உற்பத்தி அளவு 50-லிருந்து 100 சத வீதம் கூடுதலாக இருந்திருக்கும்.

புள்ளி விவரம் 4

பயிற்சி காலத்தில் கிடைத்த 72,594—500 கிலோ கிராம் பதநீரில் கிடைத்த உப உற்பத்திப் பொருள்கள் :—

		கிலோ	கிராம்	உத்தேச மதிப்பு	விலை விகிதம்	
				ரூ. ந.பை		ரூ. ந.பை
(1)	பனைவெல்லம் ...	2,734	100	2,867·02	கிலோ	0·50
(2)	முதல்தரக் கற்கண்டு ...	474	800	1,305·70	,,	2·75
(3)	இரண்டாந்தர கற்கண்டு.	638	000	1,116·50	,,	1·75 வீதம்
(4)	சர்க்கரை ...	119	450	161·26	,,	1·35 வீதம்
(5)	பனை வெல்லப்பாகு (Molasses) ...	1,288	000	386·40	,,	0·30 வீதம்
	மொத்தம் ...	8,254	350	5,826·88		

பயிற்சியாளர்கட்குக் கொடுத்த உபகாரச் சம்பளம் ரூ. 3,890—80.

உற்பத்திப் பொருள்களின் மதிப்பு ரூ. 5,836—88.

விகிதாச்சாரம் : 1 : 1·5

உபகாரச் சம்பளம் : உற்பத்தி மதிப்பு—1 : 1·5

புள்ளி விவரம் 5

ஊழியர்கள்

(1) மரம் ஏற்றுப் போதகர்—1. மாதச் சம்பளம் ரூ. 100.

(2) காவல் புரிபவர்—1. மாதச் சம்பளம் ரூ. 45.

(3) தினக்கூலி ஊழியர்கள், விறகு சேகரிக்கவும் கற்கண்டு சர்க்கரை தயாரிக்க உதவி செய்தலும் 3 நபர்கள்—
2 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு சம்பளம் ரூ. 1—25 ந.பை
1 நபருக்கு மாதச் சம்பளம் ரூ. 50.

(4) பதநீர் காய்ச்சுபவர்கள் (பெண்கள்) 2 பேரில் ஆரம்பித்து படிப்படியாக 8 பேர்கள் வரை—தினக்கூலி 0—75 ந.பை முதல் ரூ. 1—00 வரை.

(5) பதநீர் சேகரிக்கவும் பனை ஓலை மட்டைகளை சேகரிக்கவும். 11 சிறுவர், சிறுமியர்கள்—தினக்கூலி 0—37 ந பை முதல் 0—50 ந பை வரை.

மேலே கண்டவர்களைத் தவிர்த்து கடலூர் பனைத் தொழில் பயிற்சி நிலையத்திலிருந்து 2 ஊழியர்கள் நிலையத்தைக் கண்காணிக்கவும், கணக்குகள் எழுதி வரவும் தொழில் நுணுக்க உதவி செய்யவும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

புள்ளி விவரம் 6

பருவகாலம் முழுவதும் ஆன மொத்த உற்பத்தி அளவும்—மதிப்பும்

					உத்தேச மதிப்பு ரூ. ந.பை		வீதம் ரூ. ந.பை
பதநீர் ...	1,14,564	500					
பனைவெல்லம் ...			5,734	100	2,867—02	கி.கி.	0—50
பாகு ...			4,500	500	1,306—65	கி.கி.	0—30
கற்கண்டு							
முதல் ரகம்	1,432	500			3 939—51	கி.கி.	2—75
சரள்	723	500	2,166	050	1,266—02	கி.கி.	1—75
சர்க்கரை ...			589	950	796—43	கி.கி.	1—35
மொத்தம் ...					10,175—63		

புள்ளி விவரம் 7

பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டு பாராட்டிய பிரமுகர்கள்

1. திரு. V. V. இராமசாமி அவர்கள்,
தலைவர், பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம் சென்னை

2. திரு. பத்மநாபன் அவர்கள்,
செயலாளர், காதி கிராமக் கைத்தொழில் போர்டு, சென்னை.

3. திரு. மங்கேலா அவர்கள்,
ரீஜியினல் ஆர்கனைசர், கதர் கிராமக் கைத்தொழில் கமிஷன் பனைவெல்லப் பகுதி, பம்பாய்.

4. திரு. T. V. ராமானுஜம் அவர்கள்,
துணை இயக்குநர், தமிழ்நாடு கிராமக் கைத்தொழில் போர்டு, சென்னை.

5. திரு. V. கதிர்வேலு அவர்கள், மாநிலப் பனைவெல்ல நிர்மாணிகர்,
மாநில கதர் கிராமக் கைத்தொழில் போர்டு, சென்னை.

6. திரு. K. J. சோமசுந்தரம் அவர்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர், தென்னாற்காடு, கடலூர்.

7. திரு. மாவட்ட துணை ஆட்சித் தலைவர் அவர்கள்,
தென்னாற்காடு மாவட்டம், கடலூர்.

8. திரு. S. பாலசுப்பிரமணியன் அவர்கள்,
மாவட்டக் கிராமக் கைத்தொழில் அதிகாரி, கடலூர்.

9. திரு. திண்டிவனம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள்,

10. திரு. வேணுகவுண்டர் அவர்கள்,
மரக்காணம் பஞ்சாயத்து யூனியன் தலைவர்.

11. திரு. S. செல்வராஜ் அவர்கள்,
ஆணையர், பஞ்சாயத்து யூனியன், மரக்காணம்.

12. மரக்காணம் பஞ்சாத்து யூனியனின் பஞ்சாயத்துத் தலைவர்கள் 20 பேர்.

13. மரக்காணம் பஞ்சாத்து யூனியனின் கிராமத் தொண்டர் படைத் தலைவர்கள் 25 பேர்.

பார்வையாளர்களின் (முக்கிய) கருத்து

(1) கயிறு மூலம் மரம் கடத்தலினால் உடலுழைப்புக் குறைகிறது, மனித சக்தி விரயமாவது தடுக்கப்படுகிறது.

(2) இம்முறையை பின்பற்றுவதால் குறைந்த நேரத்தில் அதிக மரத்தில் பாளை சீவி உற்பத்தியைப் பெருக்கி வருவாயை அதிகரிக்கச் செய்யமுடியும்.

(3) பனை மரங்களில் ஏறுவதால் மார்பு, மணிக்கை, கணுக்கால் ஆகியவற்றில் ஏற்படும் வேனல் கட்டிகளும், தழும்புகளும், கயிறு மூலம் மரங்கடத்தலினால் தவிர்க்கப்படுகின்றன.

(4) தொழிலாளர்கள் அலகுப்பனை சீவும்போது பனைவெல்லமும், பருவப்பனை சீவும் போது கற்கண்டும் செய்தால் நிறைந்த வருவாய் கிடைக்குமென்பது உறுதி செய்யப்பட்டது.

(5) தொழிலாளர்கள் தனித்தனியே பனைவெல்லம் செய்வதைவிட 25 பேர் கூட்டாகச் சேர்ந்து செய்வதால் இடம், பாத்திரம், விறகு பதநீர் காய்ச்சும் நபர் ஆகியோருக்காக ஆகும் செலவு 50 சதமானம் குறைக்கப்பட்டு தொழிலாளர் வருமானம் கூடுதலாக வாய்ப்புண்டு என்பது நேரிடையாக உறுதி செய்யப்பட்டது.

புள்ளி விவரம் 8

100 மரம் ஏறும் பயிற்சி திட்டம் பனிச்சமேடு பயிற்சியாளர்களின் பெயரும், அவர்கள் பதநீர் இறக்கிய மரங்களின் எண்ணிக்கையும், பதநீரின் அளவும்

வரிசை எண்.	பெயர்	ஒதுக்கிய மரங்கள் (பயிற்சி காலத்தில்)	ஏறிய மரம்	இறக்கிய பதநீரின் அளவு	கயிறு கட்டிய மரங்கள்
1.	ர. கிருஷ்ணப்ப கிராமணி ...	100	93	4366½	30
2.	சுந்தரமூர்த்தி ...	,,	88	3770	38
3.	ந. இராமச்சந்திரன் ...	,,	84	3227	24
4.	ம. பூங்காவனம் ...	,,	88	3338	35
5.	வ. ஏகாம்பரம் ...	,,	79	1302½	33
6.	க. முனுசாமி ...	,,	95	3379	26
7.	தி. சுந்தரமூர்த்தி ...	,,	87	2079½	37
8.	ம. கண்பதி ...	,,	50	1127	37
9.	தி. துளசி ...	,,	71	1737½	23
10.	ப. அரிதாஸ் ...	,,	83	1670	37
11.	ர. எத்துராஜ் ...	,,	92	3225	18
12.	அ. தட்சிணாமூர்த்தி ...	,,	90	4475	24
13.	மு. சுப்ரமணியன் ...	,,	76	2339½	20
14.	மு. குப்புசாமி ...	,,	80	3687½	26
15.	த. சர்க்கரை ...	,,	92	3932½	...
16.	க. சீனிவாசன் ...	,,	88	4393½	21
17.	தோ. முனுசாமி ...	,,	85	3375½	16
18.	கி. ராமசாமி ...	,,	96	6689½	22
19.	செ. ராஜமன்னார் ...	,,	78	1592½	26
20.	ந. குப்புசாமி ...	,,	60	2021½	33
21.	அ. அழகேசன் ...	,,	72	3058	21
22.	ம. ரத்தினம் ...	,,	75	1927	22
23.	த. சடையாண்டி ...	,,	98	2958½	22
24.	மு. கிருஷ்ணன் ...	,,	102	3041	22
25.	வெ. பெருமாள் (உடல் நலக்குறைவால் பயிற்சியிலிருந்து விலகியர்)	,,	...	270½	...
				72594½	619